இந்த அறிவிப்பைக் கொடுத்திருப்பது நிச்சயமாக அவையினுடைய உரிமை மீறல் செயலாகும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அளித்த தீர்ப்புக்கு, நீங்கள் கொடுத்திருக்கின்ற உத்தரவுக்கு நிச்சயமாக அவர் எதிராகச் செயல்பட்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அவையை அவமதித்திருக்கிறார். இந்த அவையின் மரியாதையைக் குறைத்திருக்கிறார். இந்த அவையிலே இருக்கின்ற உறுப்பினர்களுடைய உரிமையைப் பறிக்க அவர் முயற்சித்திருக்கிறார். எனவே, நீங்கள் அவர் மீது, அவையினுடைய உரிமையை மீறிய குற்றத்திற்காக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுகுறித்து மின் வாரியத் தலைவரின் விளக்கத்தையும், மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்தையும் கேட்டு, பின்னர் எனது தீர்ப்பை அளிக்கிறேன்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(உ) சேரன்மாதேவித் தொகுதி நகரப் பஞ்சாயத்துக்களில் உள்ள குடிநீர்ப் பிரச்சினை.

திரு. பி. எச். பாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் அப்போது எழுப்ப முயன்ற ஒரு ஒழுங்குப் பிரச்சனை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசும்போது மக்களுடைய பிரச்சினையைப் பற்றி பேசக்கூடிய இந்த அவை என்று ஆரம்பித்தார்கள். நான் அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றுதான் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை பேசப் ஆரம்பித்தேன். மக்களுடைய பிரச்சினையைப் பேசக்கூடிய சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு அரசாங்கமும் தனிச் சலுகை காட்டவேண்டும். சபாநாயகரும் தனிச் சலுகை காட்டவேண்டும்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் மக்களுடைய இன்றியமையாத, இன்றைக்கு இருக்கக்கூடிய ஒரு அவசியமான பிரச்சினையை முதலமைச்சர் இங்கே இருக்கின்ற காரணத்தால் உடனே உத்தரவும் எனக்கு வழங்க வேண்டும் என்று நான் உங்கள் முன்னாலே வைக்கிறேன். இன்றைக்கு வறட்சி தாண்டவ மாடுகிறது. என்னுடைய தொகுதியில் ஏழு நகரப் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. கோபாலசமுத்திரம், மேலச்செவல், பத்தமடை, சேரன்மாதேவி, வீரவநல்லூர், கல்லிடைக்குறிச்சி, முக்கூடல் என்ற ஏழு நகரப் பஞ்சாயத்துக்களில் குடிநீர் பிரச்சினை இன்றைக்குத் தாண்டவமாடிக்கொண்டிருக்கிறது. ஆக, நான் மக்களுடைய பிரச்சினையைப் பேசிக்கொண்டிருக்கிறேன். மக்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்காக முதலமைச்சர் அவர்கள் உடனே ஏதாவது ஒரு நிதியை குடிநீர்த் திட்டத்தை விஸ்தரிப்பதற்கு — சில தெருக்கள் விடப்பட்டிருக்கின்றன. இங்கே வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் இப்படி நீங்கள்

1989 மார்ச் 30] *[திரு. பி. எச். பாண்டியன்]*

ஊக்குவித்தால் யாருமே இங்கே வேறு எந்தப் பிரச்சினையையும் பேசமாட்டார்கள். இங்கே வேறு பிரச்சினையே வராது. ஆகவே, ஒழுங்காக மக்களுக்காக பேசக்கூடியவர்களுக்கு போனசாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்—உதாரணமாக சேரன்மா தேவியை எடுத்து, விடுபட்ட தெருக்களுக்கு உடனே குடிப்பதற்கு தண்ணீரை வழங்குவதற்கு இன்றைக்கே ஒரு கோடி ரூபாயாவது வழங்குங்கள். நாடு பாராட்டும், எல்லா உறுப்பினர்களும் நாளையிலிருந்து சுமுகமாக இங்கே அமர்ந்து பேசுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மாதேவியில் மட்டும் அல்ல, மாநிலம் முழுவதும் இருக்கின்ற வறட்சிப் பிரச்சினை குறித்து ஆராயவும், அதற்குரிய முடிவுகளை எடுக்கவும் வருகின்ற 15, 16 ஆகிய நாட்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டி இருக்கிறேன். அப்போது நம்முடைய திரு. பாண்டியன் அவர்கள் சொன்னது எல்லாம் உண்மைதானா என்பதை ஆராய்ந்து ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஊ) அவைக் குறிப்பிலிருந்து சில சொற்களை நீக்கக் கோருதல்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை கூறும்போது கடைசியாக நான் ஒரு மிக, மிக சாதாரணமானவன், கேவலமானவன், சூத்திரன் என்பதாலே என்ற வார்த்தைகள் பத்திரிகையில் செய்தியாக வந்திருக்கிறது. தயவு செய்து தங்கள் மூலம் அந்த வார்த்தைகள் குறிப்பேட்டில் வந்து அச்சடிக்கப்பட்டு பிற்காலத்தில் எல்லோரும் படிக்கக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக அதை நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொன்மைக் காலத்திலிருந்த புராணங்களிலேயே இருக்கிறது. எனவே, இங்கே இருப்பது தவறு இல்லை.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூத்திரன் என்று இருப்பதை நான் மறுக்கவில்லை. சாதாரணமானவன், மிகவும் கேவலமானவன் என்ற வார்த்தைகளையாவது நீக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(எ) பேரவை மரபுகளைக் கடைப்பிடித்தல் குறித்து.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சட்டமன்ற விதிகள் இருக்கின்றன. இப்போது இங்கே மாண்புமிகு திரு. பாண்டியன் அவர்கள் மக்கள் குறைகளை எடுத்துப் பேசினார்கள். அதற்கு மாண்புமிகு